# தொழில்துறை வழிகாட்டுதல்: பொது சுகாதாரக் கடமையுடன் நீங்கள் இணங்குவதற்கு ஆதரவளிக்கிறோம்

EPA VICTORIA | Environment Protection Authority Victoria | VICTORIA State Government

வெளியீடு1741 ஏப்ரல் 2019 Translated publication: 1787 தகவல் தாள்

புதிய சட்டப்பூர்வ கட்டமைப்பு 1 ஆம் தேதி ஜூலை 2020 அன்று தொடங்கவுள்ளது. இந்தக் கட்டமைப்பு, சுற்றுப்புறச் சூழலுக்கு இடர்களை விளைவிக்கும் ஒவ்வொருவரும் அதற்கான பொறுப்பை ஏற்பதை உறுதிப்படுத்தும். பொது சுகாதாரக் கடமையானது (GED) Victoria இல் உள்ள அனைவருக்கும் பொருந்தும். GED இன்படி, மாசுபாடு மற்றும் குப்பைகள் மூலமாக மக்களின் ஆரோக்கியத்திற்கும் சுற்றுப்புறச் சூழலுக்கும் நாம் விளைவிக்கக்கூடிய இடர்களைப் பற்றி புரிந்துகொண்டு அதைக் குறைக்க வேண்டும். *சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம் 2017* (சட்டம்) இன் குறிக்கோளை GED ஆதரிக்கிறது.

வணிகங்களுடன் நாங்கள் ஒன்றிணைந்து செயல்பட்டு, அவர்களது கடமையை எவ்வாறு நிறைவேற்றுவது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள உதவுவோம். நாங்கள் வழிகாட்டுதலையும் ஆலோசனையையும் பிற ஆதரவையும் வழங்குவோம்.

GED உடன் இணங்குவதற்கு, வணிகங்கள் இவற்றைச் செய்யவேண்டும்:

- நடைமுறை முயற்சிகளை மேற்கொள்ளுதல்
- சுற்றுப்புறச் சூழல் சார்ந்த நல்ல செயல்முறைகளை மேற்கொள்ளுதல்.

## GED இன் கீழ் இயங்குதல்

பெரும்பாலான வணிகங்கள் GED இன் கீழ் வித்தியாசமாக எதையும் செய்ய வேண்டியதில்லை. அவற்றில் பல, GED உடன் இணங்குவதற்கு உதவக்கூடிய நல்ல மேலாண்மைச் செயல்முறைகளை ஏற்கனவே பின்பற்றி வருகின்றன. இந்தச் செயல்முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:

- தொழில்முறை சார்ந்த சுகாதாரம் மற்றும் பாதுகாப்பிற்கான பொறுப்புகளை நிறைவேற்றுவது
- தொழில்துறை சார்ந்த தரநிலைகளைக் கடைபிடிப்பது
- தொழில்துறை சார்ந்த சிறந்த மேலாண்மை செயல்முறைகளை மேற்கொள்வது
- சுற்றுப்புறச் சூழல் தொடர்பான பிற சட்டங்களைப் பின்பற்றுவது.

GED ஆனது, சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய எந்தவித இடர்களையும் குறைக்கும் வகையில் உங்கள் வணிகத்தை நீங்கள் நிர்வகிக்க வேண்டுமென தெளிவாகக் கூறியுள்ளது.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லை எனில், அதற்கு GED உதவ முடியும். GED ஆனது, இடர்களைப் புரிந்துகொள்வதற்கும் அவற்றைக் குறைக்கக்கூடிய படிநிலைகளை மேற்கொள்வதற்கும், நாம் பின்பற்றக்கூடிய தெளிவான கட்டமைப்பை உங்களுக்கும் எங்களுக்கும் வழங்கியுள்ளது.

சரியானவற்றைச் செய்யாத வணிகங்களுக்கான கடமைகளை, சட்டம் தெளிவாக வழங்கியுள்ளது. அத்துடன் அதுபோன்ற வணிகங்களைக் கண்டறிந்து அவற்றைச் சட்டத்திற்கு இணங்க வைப்பதற்கான கருவியையும் வழங்கியுள்ளது. இது அனைவரும் செயல்படக்கூடிய ஒரு தளத்தை உருவாக்குகிறது.

## GED என்றால் என்ன?

விளக்கம்*:* "மாசுபாடு மற்றும் குப்பை மூலமாக மனித ஆரோக்கியத்திற்கோ சுற்றுப்புறச் சூழலுக்கோ தீங்கு விளைவிக்கக்கூடிய இடர்களை அதிகப்படுத்தும் வகையிலான செயல்பாடுகளை மேற்கொள்ளும் நபர், நடைமுறையில் செயல்படுத்தக்கூடிய வகையில் அந்த இடர்களைக் குறைக்க வேண்டும்."

**நடைமுறையில் செயல்படுத்தக்கூடியவை** என்பது, இடருக்கு நிகரான, அதை நிர்வகிப்பதற்கான கட்டுப்பாடுகளைச் செயல்படுத்துவதாகும்.

இது, சுற்றுப்புறச் சூழலில் விளைவிக்கப்படுகின்ற தீங்கு மற்றும் சாத்தியமுள்ள தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தீங்கிற்குத் தொடர்புடையதாகும். மேலும் இது பின்வருவனவற்றிற்குத் தொடர்புடையதாகும்::

- என்னென்ன கட்டுப்பாடுகள் உள்ளன
- அவற்றிற்கு ஆகும் செலவு
- வழக்கமாக இடரைப் பற்றி வணிகங்கள் அறிந்துள்ளவையே 'அறிவுநிலை' என அழைக்கப்படுகிறது
- அதைக் கட்டுப்படுத்துவதற்கு அவர்களிடம் உள்ள வழிகள்.

### கூடுதல் தகவலுக்கு

*எங்களைத் தொடர்புகொள்ளவும்:* www.epa.vic.gov.au
***1300 372 842*** *(1300 EPA VIC)*

தொழில்துறை சார்ந்த வழிகாட்டுதல்களுக்கு:
www.epa.vic.gov.au/business-and-industry/guidelines

புதிய சட்டங்களைப் பின்பற்றுவதற்கு:
www.epa.vic.gov.au/newlaws

புதிய சட்டங்களைப் புரிந்துகொள்ள:
engagement@epa.vic.gov.au

Authorised and published by
Environment Protection Authority Victoria
200 Victoria Street, Carlton VIC 3053
**W** epa.vic.gov.au | **T** 1300 372 842 (1300 EPA VIC)

Interpreter

If you need interpreter assistance or want this document translated please call **131 450** and advise your preferred language.

If you are deaf, or have a hearing or speech impairment, contact us through the National Relay Service. For more information, visit: **www.relayservice.gov.au**

## அறிவுநிலையைப் பற்றி புரிந்து கொள்ளுதல்

அறிவுநிலையானது, வணிகங்களுக்குத் தெரிந்த அல்லது தெரிந்துகொள்ள வேண்டிய மனித ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு விளைவிக்கப்படும் தீங்கு அல்லது தீங்கு ஏற்படக்கூடிய சாத்தியங்களைப் பற்றி விளக்குகிறது. அத்துடன் அந்த இடர்களை ஒழிப்பதற்கான அல்லது குறைப்பதற்கான கட்டுப்பாடுகளைப் பற்றி அவர்கள் அறிந்துள்ளவற்றையும் இது விளக்குகிறது.

GED இன் கீழ் உங்களது செயல்பாடுகள் ஏற்படுத்தக்கூடிய இடர்களைப் பற்றியும் அவற்றை எவ்வாறு குறைப்பது என்பது பற்றியும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.

இந்தத் தகவலைப் பெற, நீங்கள் நம்பகமான, நம்பிக்கைக்குரிய ஆவணங்களைப் பயன்படுத்த வேண்டும். இந்தத் தகவலை இவற்றின் மூலம் பெறலாம்:

- உங்களது வணிகம் மற்றும் தொழில்துறை
- கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் அரசு முகமைகள்
- தனிப்பட்ட நிறுவனங்கள்.

**வணிகம் மற்றும் தொழில்துறை சார்ந்த தகவலில்**, இவை இருக்கலாம்:

- செயல்பாடுகளைப் பாதுகாப்பாக மேற்கொள்ள வணிகம் சார்ந்த ஆவணங்களையும் நடைமுறைகளையும் பெற்றிருத்தல்
- வழங்குநர் மற்றும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து வழிமுறைகளையும் தகவலையும் பெற்றிருத்தல்
- பாதுகாப்பிற்கான தரவுத் தாளையும் லேபிளையும் பெற்றிருத்தல்
- தயாரிப்புகளைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவதற்கான தயாரிப்பாளர்களின் வழிமுறைகளைப் பெற்றிருத்தல்
- உபகரணங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்த பயிற்சியைப் பெற்றிருத்தல்
- செயல்பாடுகளில் பங்கேற்பவர்களுக்கு இடையேயான ஒப்பந்த ஏற்பாடுகளைப் பெற்றிருத்தல்
- ஆவணங்கள், வழிமுறைகள், வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை தொழில்துறை அமைப்புகளிடமிருந்தும் முன்னணி குழுமங்களிடமிருந்தும் பெற்றிருத்தல்.

EPA மற்றும் பிற அரசு அதிகாரிகளிடமிருந்து (சஸ்டைனலபிலிட்டி விக்டோரியா மற்றும் ஒர்க்சேஃப் உட்பட) பெறப்பட்ட **கட்டுப்பாட்டாளர் மற்றும் அரசு முகமைகள் குறித்த தகவலில்** இவை இருக்கலாம்:

- வழிகாட்டுதல்கள் மற்றும் தொழில்நுட்பக் குறிப்புகள்
- உடன்பாடு குறித்த தீர்மானங்கள் மற்றும் அமலாக்க முடிவுகள்
- ஆலோசனை (குறிப்பிட்ட முறையில் உங்கள் வணிகத்திற்கு வழங்கப்படும் ஆலோசனை உட்பட).

**தனிப்பட்ட நிறுவனங்களின் தகவலில்** இதுபோன்ற நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட அறிக்கைகளையும் கொண்டிருக்கலாம்:

- ஸ்டாண்டர்டுஸ் ஆஸ்திரேலியா
- பல்கலைக்கழகங்கள்
- சுற்றுச்சூழல் சார்ந்த பொறியாளர்கள்.

அறிவுநிலையானது, புதிய தொழில்நுட்பம், அமைப்புகள் ஆகியவை வரும்போதும் செயல்பாடுகள் மேம்படும்போதும் மாறும் அல்லது புதிய இடர் ஏற்படும்போது மாறும்.

## தகவலைத் தெரியப்படுத்துவதற்கு நாங்கள் உதவும் விதம்

இடர்களைக் அடையாளம் கண்டு அவற்றைக் கட்டுப்படுத்த வணிகங்களுக்கு உதவுவதற்கான வழிகாட்டுதலை மேம்படுத்துவதற்கு தொழில்துறையுடன் இணைந்து செயல்படுவோம்.

இது பின்வருவனவற்றைக் கொண்டிருக்கலாம்:

- ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த முக்கிய சிக்கல்கள் பற்றிய தகவலை வழங்குவது
- சட்ட விதிமுறைகள் பற்றி வணிகம் அறிந்துகொள்வதற்கு உதவக்கூடிய வழிகாட்டுதலைத் தொடங்குவதை ஆதரிப்பது
- மோசமாகவும் தொடர்ந்து சட்டத்திற்கு இணங்காமல் செயல்படும் தொழில்துறை உறுப்பினர்களுக்கு வணிகங்கள் சார்ந்த நெறிமுறைகளைக் கற்பிப்பது

உங்களது தொழில் சங்கத்தையும் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.



*சுற்றுச்சூழலில் நீங்கள் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தை எவ்வாறு நிர்வகிப்பது என்பது பற்றிய கூடுதல் தகவலுக்கு, இந்த இணைப்பிற்குச் சென்று பார்க்கவும்*

epa.vic.gov.au/business-and-industry/how-to-manage-your-environmental-impact